முதலின மற்றும் வருவாயின நடவடிக்கைகள்
மாதிரி வினாத்தாள்-1
11th Standard

**கணக்குப்பதிவியல்**

Reg.No. :

## I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

Time : 00:35:00 Hrs    Total Marks : 20

பகுதி-அ    8 x 1 = 8

1) ஓராண்டிற்கு மேல் தொழிலுக்கு பயன்தரும் நடவவடிக்கை
(a) முதலின நடவடிக்கை (b) வருவாயின நடவடிக்கை (c) இரண்டும் இல்லை

2) பழைய சீருந்தை புதுப்பிக்கச் செலவு செய்கிறது.
(a) நீள்பயன் வருவாயினச் செலவு (b) வருவாயினச் செலவு (c) முதலினச் செலவு

3) சங்கர் தன் தொழிலில் ரூ. 50,000 கூடுதல் முதல் போட்டது.
(a) முதலின வரவு (b) வருவாயின வரவு (c) இரண்டும்

4) வருவாயின வரவுகள் தொழிலில் ...................... கொண்டவை.
(a) அடிக்கடி நிகழாத் தன்மை (b) அடிக்கடி நிகழும் தன்மை (c) இரண்டும் இல்லை

5) வெங்கடேசன் விற்பனை செய்வதற்காக ரூ. 80,000 மதிப்புள்ள சரக்கை கொள்முதல் செய்வது, ஒரு
(a) முதலினச் செலவு (b) வரவாயினச் செலவு (c) நீள் பயன் வருவாயினச் செலவு

6) விளம்பரத்திற்கு அதிகமாக செலவு செய்தது, ஒரு
(a) முதலினச் செலவு (b) வருவாயினச் செலவு (c) நீள் பயன் வருவாயினச் செலவு

7) ரூ. 8,000 மதிப்புள்ள ஒரு பொறி வகை ரூ. 8,500க்கு விற்பனை செய்ததில் முதலின வரவு.
(a) ரூ. 8,000 (b) ரூ. 8,500 (c) ரூ. 500

8) தொழிலில் கிடைக்கப்பெற்ற நிகர நட்டம் , ஒரு
(a) வருவாயினை நட்டம் (b) முதலின நட்டம் (c) இரண்டும் இல்லை

பகுதி-ஆ    6 x 2 = 12

9) முதலின இலாபம் என்றால் என்ன?

10) வருவாயின நடவடிக்கைகள் என்றால் என்ன?

11) முதலின நடவடிக்கைகள் என்றால் என்ன?

12) வருவாயின இலாபம் என்றால் என்ன?

13) சிவா & கோ .,2003 ஆம் ஆண்டில் செய்த செலவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன . அவைகளை முதலினம் மற்றும் வருவாயினங்களாக வகைப்படுத்துக.
(1) அறைகலன் வாங்கியது ரூ.1,000
(2) பழைய இயந்திரம் வாங்கியது ரூ.40,000
(3)கொள்முதல் செய்த சரக்கினைக் கொண்டு வர சத்தம் கொடுத்தது ரூ.50
(4) பழைய இயந்திரம் வாங்கியவுடன் பழுதுபார்க்கச் செலவிட்டது ரூ.175
(5) பொறிவகையை நிர்மாணிக்க வேலையாளர்களுக்கு கொடுத்த கூலி ரூ.600

14) அரி&கோ, 2003 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் செலவுகள் செய்தது. அவற்றை முதலின, வருவாயின செலவுகளாகப் பிரிக்க.
(1) இயந்திரத்தின் ஒரு பகுதியை மாற்றச் செலவிட்டது ரூ.750.
(2) கடன் பெற சட்டமுறைச் செலவுகள் செய்தது ரூ.1,500
(3) பொறிவகையை பழுது பார்த்தது ரூ.300
(4)பெட்ரோல் என்ஜினுக்குப் பதில் டீசல் என்ஜின் மற்ற செலவு செய்தது ரூ.6,000
(5) மின் கட்டணம் செலுத்தியது ரூ.1,200

*****************************************

QB365 QUESTION BANK 365 https://www.qb365.in